# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ் கான், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 210/மா/2023**

**நாள்: 02.09.2023**

திரு. R. மயில்சாமி,
புதுவிளாங்குடி,
மதுரை. – முறையீட்டு மனுதாரர்

உதவி ஆணையர்,
மண்டலம் - 5, (வடக்கு),
மதுரை மாநகராட்சி,
திருப்பரக்குன்றம்,
மதுரை – 625 005. – எதிர்மனுதாரர்

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண்.5ல் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவரின் 17.6.2023 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 19.06.2023–ல் பெறப்பட்டு 210/மா/2023 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

மதுரை, புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, மனை எண்.5ல் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 17.06.2023 நாளிட்ட தனது மனுவில் :

மதுரை மாநகராட்சி, மண்டலம் - 5 (மேற்கு) உட்பட்ட பசுமலை மூலக்கரை மூட்டா தோட்டம் மெயின் ரோட்டில் இயங்கும் லிங்கம் மஹால் A.C., (திருமண மண்டபம்) அனுமதிக்கு மாறாகவும் சட்டத்திற்கு புறம்பாக கூடுதல் கட்டடமும் இம்மஹாலுக்கு வாகனம் நிறுத்துவதற்கு பார்கிங் இடம் (Parking Space) இடம் விடாமல் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சி துறை G.O. Ms. No. 175, நாள்: 14.7.2006ன்படி 100 மீட்டர் தூரம் வரை, கண்மாய், ஏரி, ஆறு, சுடுகாடு, இடுகாடு இருக்கும் பகுதிகளில் கட்டுமானங்கள் கட்டுவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. ஆனால் மேற்படி மஹால் மேற்குப் பகுதியில் பெரிய கண்மாய் உள்ளது. லிங்கம் மஹால் கட்டடத்திற்கு முழுமையாக அளவீடு செய்யாமல் குறைத்து மதிப்பீடு செய்து சொத்துவரி விதிக்கப்பட்டு அதனால் மதுரை மாநகராட்சிக்கு வரி இழப்பு ஏற்படுகிறது. மேலும் இம்மஹாலுக்கு நான்கு புறமும் இடம் விடாமல் கட்டப்பட்டுள்ளது. மேலும் லிங்கா மஹாலுக்கு தமிழ்நாடு பொது கட்டிடங்கள் (உரிமம்) சட்டம் 1965 பிரிவு 2 (8)ன்படி வருவாய்

வட்டாட்சியரிடம் உரிமம் பெறவில்லை. மேலும், தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் (3)ன்படி நகர் (ம) ஊரமைப்பு திட்ட இயக்கத்தால் அனுமதி பெறவில்லை. எனவே மேற்படி லிங்கம் மஹால் A.C. (திருமண மண்டபம்) அனுமதிக்கு மாறாக கூடுதல் கட்டிடம் கட்டியும், வாகன நிறுத்துவதற்கு (Parking Space) இடம் விடாமலும் அவசர கால வழி இல்லாமல் நான்கு புறமும் 5 அடி இடம் விடாமலும், மேற்படி அரசாணையை மீறியும் சட்டத்திற்கு புறம்பாக உள்ள கட்டிடத்தை (Violation of Building) அகற்றியும் (Remove) மின் இணைப்புகளை துண்டித்தும் நகர் ஊரமைப்புச் சட்டம் 1971-ன் பிரிவுகள் 56 (1) மற்றும் 57 – உடன்படிக்கப்பட்ட பிரிவு 85-கீழ் Stop Work Notice / Notice Calling for approved Plan அறிவிப்பினையும் அதன் தொடர்ச்சியாக வழங்கப்பட வேண்டிய மூடி முத்திரையிடுதல் Lock and Seal Demolition Notice வழங்கியும் மற்றும் விரைவான அமலாக்க நடவடிக்கை, தமிழக அரசாணை (நிலை) எண்.99, நாள்:21.9.2015 ப (ம) நி.சீ. துறை உத்தரவின்படி 30 தினங்களுக்குள் நடவடிக்கை எடுக்கப்பட்டு எனக்கு உரிய முறையில் தகவல் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்."

**2. இம்முறைமன்ற கடித நாள் 31.7.2023 வாயிலாக மதுரை மாநகராட்சி உதவி ஆணையரிடம் இம்மனுமீது அறிக்கை கோரப்பட்டது. மதுரை மாநகராட்சி உதவி ஆணையர் தன்னுடைய 14.8.2023 நாளிட்ட அறிக்கையில் :**

திரு. R. மயில்சாமி என்பவரது புகார் மனு வரப்பெற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு வந்த நிலையில் ஒரு மாதகாலத்திற்குள் அதே விபரம் தகவல் அறியும் உரிமைச்சட்ட மனுவில் கேட்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுக்கள் இரண்டும் லிங்கா திருமண மண்டபம் பற்றிய தகவலாக இருப்பதால் உதவி வருவாய் அலுவலர் (ம) உதவிப் பொறியாளரின் குறிப்பின் அடிப்படையில் மனுதாரர் கோரிய லிங்கா திருமண மண்டபம் குறித்து நடவடிக்கை எடுக்கப்பட்டு 19.06.2023-ல் கடிதம் மூலம் அனுப்பப்பட்டது. அதன் நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது என்ற விவரத்தினை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் ஆணையத்திற்கு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

எனவே இவ்வழக்கினை ரத்து செய்யுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்றேன்.

**3. முறையீட்டு மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 21.08.2023 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 14.08.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.**

மனுதாரர் 21.08.2023 அன்று மதுரை முகாமில் நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"மதுரை மாநகராட்சி மண்டலம் 5 (மேற்கு) பசுமலை மூலக்கரை அருகில் உள்ள மெயின்ரோட்டில் லிங்கம் மகால் என்கின்ற திருமண மண்டபம் இயங்கிவருகிறது. அனுமதிக்கு மாறாகவும், சட்டத்திற்கு புறம்பாகவும் கூடுதலாக கட்டப்பட்டுள்ள மேற்கண்ட திருமண மண்டபத்திற்கு வரும் வாகனங்களை நிறுத்துவதற்கு அம்மண்டபத்தில் போதுமான இடமில்லை. மேலும் பொதுமக்கள் பயன்படுத்தும் கட்டடமாக லிங்கா மகால் உள்ளதால், 1971ம் ஆண்டைய தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டப்படி அக்கட்டடத்திற்கு நகர்மற்றும் ஊரமைப்பு திட்ட இயக்கக ஒப்புதல் பெறவில்லை. மேலும் தமிழ்நாடு பொது கட்டடங்கள் (உரிமம்) சட்டம் 1965 பிரிவு 2(8)ன்படி வருவாய் துறையிடம் உரிய அனுமதியும் பெறவில்லை.

எனவே, விதிகளை மீறி சட்டத்திற்கு புறம்பாக கட்டப்பட்டுள்ள மேற்கண்ட கட்டடத்தின் மீது நகர் ஊரமைப்பு சட்டம் 1971ன் பிரிவுகளின் தேவையான நடவடிக்கை எடுத்திட ஆவண செய்யுமாறு இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**4. மதுரை மாநகராட்சியின் உதவி ஆணையாளர் 21.08.2023 அன்று நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.**

"மனுதாரர் குறிப்பிட்டுள்ள மதுரை மாநகராட்சி மண்டலம் 5 (மேற்கு) பசுமலை மூலக்கரை அருகில் உள்ள மெயின்ரோட்டில் லிங்கம் மஹால் திருமண மண்டபத்திற்கு கட்டட அனுமதி வழங்கப்படாத நிலையில், அம்மண்டபத்திற்கு Notice of Inspection 29.5.2023 அன்றும், Notice for production of documents 1/6/2023 அன்றும் Removal Notice for the removal of unauthorized development carried out without planning permission 10/6/2023 அன்றும் மண்டல உரிமையாளருக்கு வழங்கப்பட்டுள்ளது என தெரிவித்து அவற்றின் நகல்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

மேற்கண்ட அறிவிப்புகளைத் தொடர்ந்து Tamil Nadu Town and Country Planning Act-ன்படி சட்டப்பூர்வ நடவடிக்கை இன்னும் 15 நாட்களில் மேற்கொள்ளப்படும் என்கின்ற விவரத்தை இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" எனத் தெரிவித்துள்ளார்.

**5. முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலம், மதுரை மாநகராட்சியின் உதவி ஆணையாளரின் வாக்குமூலம் மற்றும் அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன:**

மனுதாரர் மதுரை மாநகராட்சி மண்டலம் - 5 (மேற்கு) பசுமலை மூலக்கரை அருகில் உள்ள மெயின் ரோட்டில் லிங்கா மஹால் என்ற திருமண மண்டபம் எவ்வித அனுமதியும் பெறாமல் சட்டத்திற்கு புறம்பாக கட்டப்பட்டுள்ளது எனவும், இது குறித்து புகார் மனு அளித்தும் மதுரை மாநகராட்சி மண்டலம்-5, (மேற்கு)ன் அலுவலர்கள் எவ்வித நடவடிக்கை எடுக்கவில்லை என்று தெரிவித்து, விதி மீறி கட்டப்பட்ட லிங்கா மஹால் மீது சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்க உத்திரவிடுமாறும், தன் மனு மீது நடவடிக்கை எடுக்காத மதுரை மாநகராட்சி மண்டலம்-5ன் அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

2. மனுதாரர் குறிப்பிட்டுள்ள மதுரை மாநகராட்சி மண்டலம்-5 (மேற்கு) பசுமலை - மூலக்கரை மெயின் ரோட்டில் லிங்கா மஹால் என்ற திருமண மண்டபம் கட்டிட அனுமதி பெறாமலும், விதிமீறி கட்டப்பட்டுள்ளதும், அதற்கு 29.5.2023 அன்று Notice of Inspection வழங்கப்பட்டுள்ளது என்றும், 1.6.2023 அன்று Notice for Production of documents வழங்கப்பட்டுள்ளது என்றும், 10.6.2023 அன்று Notice for the removal of unauthorized development carried out without planning permission தாக்கீதும் வழங்கப்பட்டுள்ளது என்று மதுரை மாநகராட்சி மண்டலம்-5ன் உதவி ஆணையர் அறிக்கையிலும், வாக்குமூலத்திலும் தெரிவித்துள்ளார். மனுதாரர் 11.5.2023 அன்று மேற்கண்ட விதிமீறல் லிங்கம் மஹால் திருமண மண்டபம் குறித்து மனு அளித்த பிறகு தான் மதுரை மாநகராட்சி மண்டலம்-5ன் அலுவலர்கள் நடவடிக்கை எடுத்து இருப்பது தெரியவருகிறது.

## Tamil Nadu Urban Local Bodies Act 1998, Chapter VIII Part – I

135. Powers of Commissioner to regularize unauthorized construction : –

(1) Where the construction, reconstruction or modification of any building is commenced or completed without any permission duly granted by the Commissioner or by any appellate or revisional authority or where such construction, reconstruction or modifications has been made otherwise than in accordance with the provisions of this Act and the rules made thereunder, or in violation of the conditions of any permission, the (Commissioner may lock and seal and building or) issue a notice to the owner or occupier or any person who is in-charge of the construction directing him to regulate the construction of such building in accordance with the rules and conditions imposed in the notice within a period of fifteen days from the date of receipt of such notice.

(2) On the issue of such notice, the owner or the occupier or the person in-charge of the construction shall stop the construction forthwith and apply to the Commissioner for regularization of the construction in accordance with the rules and conditions specified in the notice issued under sub-section (1) within the time stipulated in the notice.

(3) Where any such application is so made, the Commissioner may, after scrutiny of such application in the prescribed form received together with any plan, and after satisfying himself that the construction work is in accordance with the rules, he may grant the permission after collecting necessary fee and the penalty prescribed.

(4) Where the Commissioner, on scrutiny of such application, is of the opinion that the construction work which is in progress or the construction which has been completed or the construction work as proposed in the plan is in deviation of the provision of this Act, or the rules framed thereunder, he may issue another notice to the persons concerned to cause necessary modification by way of removing any existing structure or by making necessary alterations within the period specified therein:

Provided that the Commissioner may, on receipt of an application after inspection of the work, may grant an extension of time not exceeding the period prescribed if he satisfies that the applicant had sufficient cause for not carrying out the orders of the Commissioner within the said period.

(5) & (b) x x x x

மேற்கண்ட விதியின்படி மனுதாரர் குறிப்பிட்ட விதிமீறல் லிங்கா மஹால் கட்டடத்தை ஆரம்ப நிலையிலேயே கள ஆய்வு செய்யப்பட்டிருந்தால், இவ்வாறான புகார் மனுக்களை தவிர்த்திருக்கலாம். ஆனால் லிங்க மஹால் திருமண மண்டபம் விதி மீறி கட்டப்பட்டு அதனை மனுதாரர் சுட்டிக் காட்டிய பிறகு மதுரை மாநகராட்சி மண்டலம்-5ன் அலுவலர்கள் நடவடிக்கை எடுத்து இருப்பது, விதி மீறலுக்கு இவர்களே காரணமாகவும், கட்டட உரிமையாளருக்கு உடந்தையாகவும் செயல்பட்டு இருக்கிறார்கள் என இம்முறைமன்ற கருதுகிறது. இது மிகவும் கண்டிக்கத் தக்கது ஆகும்.

மதுரை மாநகராட்சி, மண்டலம்-5 (மேற்கு)ன் உதவி ஆணையர் தன்னுடைய 14.8.2023 நாளிட்ட அறிக்கையில் "இவ்வழக்கினை ரத்து செய்யுமாறு கோரியுள்ளார்." தமிழ்நாடு-

உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் 2014 பிரிவு 8 (1)ல் இம்முறைமன்றத்திற்கு "உரிமையியல் நீதிமன்றம் (City Civil Court) அந்தஸ்து வழங்கப்பட்டுள்ள நிலையில், மதுரை மாநகராட்சி, மண்டலம்-5ன் உதவி ஆணையர், மதுரை மாநகராட்சி ஆணையரை தவிர்த்து, நேரிடையாக இம்முறைமன்றத்திற்கு கோரிக்கை விடுத்திருப்பது, மதுரை மாநகராட்சி மண்டலம்-5ன் உதவி ஆணையருக்கு "பதவி வரிசை முறை" (Protocol) விதிமுறை என்பதால் இனிவரும் காலங்களில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு நேரிடையாக கடிதங்கள் அனுப்புவதை தவிர்த்திடுமாறு அனைத்து உதவி ஆணையர்களுக்கும் அறிக்கை அனுப்புமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

2014-ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டம் மற்றும் விதிகளில், இம்முறைமன்றத்திற்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் குறிப்பாக:

பிரிவு 7. The Ombudsman shall perform all or any of the following functions, namely :-

(i) enquire into any written complaint from the Government or that has come to the notice of the Ombudsman in which corruption or maladministration of a public servant or a local body is alleged;

(ii) pass an order on the proved allegation in the following manner, namely

(a) xx xx xx

(b) xx xx xx

(c) Where the irregularity is due to wilful negligence or dereliction of duty of any officer or employee of the local body, recommend for departmental action by the appropriate authority under the relevant rules-ன் அடிப்படையில் இம்முறைமன்றம் பின்வருமாறு ஆணையிடுகிறது:-

மதுரை மாநகராட்சி மண்டலம் - 5ற்கு உட்பட்ட பசுமலை மூலக்கரை அருகில் மூட்டா தோட்டா மெயின் ரோட்டில் விதி மீறி கட்டப்பட்டுள்ள லிங்க மஹால் திருமண மண்டபத்தை ஆரம்ப நிலையிலேயே கள ஆய்வு செய்யாமல் அலட்சியமாகவும், மெத்தனமாகவும் செயல்பட்ட மதுரை மாநகராட்சி மண்டலம்-5ன் அலுவலகத்தின் சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது உரிய ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறும், எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த அறிக்கையை இம்முறைமன்றத்திற்கு 45 தினங்களுக்குள் அனுப்பி வைக்குமாறும் மதுரை மாநகராட்சி ஆணையருக்கு இம்முறைமன்றம் பரிந்துரை செய்து ஆணையிடுகிறது. மேலும், மதுரை மாநகராட்சி மண்டலம் -5ற்கு உட்பட்ட இடங்களில் விதி மீறி கட்டப்பட்டு வரும் கட்டடங்களை கள பணியாளர்களை ஆய்வு பணியில் ஈடுபடுத்தி, விதிமீறி கட்டடம் கட்டும் உரிமையாளர்கள் மீது சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்குமாறு மதுரை மாநகராட்சி மண்டலம் 5ன் உதவி ஆணையருக்கு இம்முறைமன்றம் அறிவுரை வழங்கி ஆணையிடுகிறது.

The Commissioner Madurai Corporation is directed to issue suitable instructions to the Zonal Assistant Commissioners as to how to carry -out the final orders of this Forum in letter and spirit instead of addressing this Forum to cancel its orders issued on merits of the complaint after hearing both sides and obtaining depositions. This kind of response by the Assistant Commissioners of Madurai Corporation exposes their shallowness in working knowledge of the constitution of this Forum, its role and powers. In this particular case right from the Assistant Commissioner to the last field level functionary had not done anything till the receipt

of the complaint betraying their collusion, connivance, complicity, lethargy and total lack of devotion to duties casting suspicions on their integrity itself.

When this is the ground reality in this case what locus standi and fitness does this Assistant Commissioner have to address this Forum in this manner? The Forum expresses its deep displeasure and censure over this act of the Assistant Commissioner Zone (5) Madurai West.

2023-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 02-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு. R. மயில்சாமி,
மனை எண்.5, அய்யப்பன் தெரு,
செம்பருத்தி நகர், புதுவிளாங்குடி,
மதுரை – 625 018.
2. ஆணையர்,
மதுரை மாநகராட்சி,
தல்லாகுளம்,
மதுரை.
3. உதவி ஆணையர்,
மண்டலம் - 5, (வடக்கு),
மதுரை மாநகராட்சி,
திருப்பரக்குன்றம்,
மதுரை – 625 005.
4. நகராட்சி நிர்வாக இயக்குநர், நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம், சென்னை – 600 028.
5. இணை இயக்குநர் ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்.
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்